**ஹட்டன் திக்ஓய நகர சபை - 2024**

-----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹட்டன் திக்ஓய நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹட்டன் திக்ஓய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை பயன்படுத்திருக்கின்ற 05 வாகனங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 446,012 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய 2025 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 640,577 ஆன தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 520,535 கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | - மேற்படி - | -- மேற்படி - |

#### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 02 கணக்கு மீதிகளுக்குரிய மீதிகள் அவற்றுக்குரிய பயன்பாட்டு அறிக்கை மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 17,716,118 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | அட்டவணைகள் தவறுகளுடன் இருந்ததாக இருந்ததுடன் அட்டவணைகளை சரியாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக . | கணக்கு மீதிகளை உரிய அட்டவணைகளுடன் ஒப்பீடு செய்ய வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 08 விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 8,447,271 ஆன அட்டவணைகள், கோவைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | கோவைகளை கண்டுபிடித்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகளுக்குரிய பதிவேடுகள் அட்டவணைகள் மற்றும் கோவைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| (i) | நி.பி 104(3) | 2020 ஜனவரி 28 ஆம் திகதி திடீர் தீ விபத்திற்கு உட்பட்டு சேதமடைந்த வாடி வீட்டுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நான்கு ஆண்டு கள் காலம் கடந்திருந்த போதும் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | போதியளவு தகவல் இல்லாததால் பரிசோதனை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படவில்லை என்பதாக. | நிதி பிரமாணங்களின் பிரகாரம் தீப்பற்றியமைக்கான உரிய பரிசோதனை மேற்கொண்டு பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நி.பி 571(3) | 2001 ஆம் ஆண்டு முதல் 2023 வரையான காலப் பகுதியில் வைப்புச் செய்யப்பட்ட காலாவதியான ரூபா 7,751,739 ஆன 92 வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நவடிக்கை எடுக்கப்படவில்லை. | வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காலாவதியான வைப்புக்களை தீர்வு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ) மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை** | | | |
| 1988 மே 17 ஆம் தியாகிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2017 ஆம் ஆண்டின் பின்னர் சபை அதிகார பிரதேசத்தில் வீதவரி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மதிப்பீடு செய்வதற்கு விலை மதிப்பீட்டு திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆசனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பிரகாரம் வீதவரி அறவிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 95,143,951 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 43,466,570 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 17,644,000 | 18,161,794 | 15,757,659 | 14,945,000 | 17,944,000 | 18,230,346 | 20,894,910 | 12,540,865 |
| (ii) | வாடகை | 55,972,889 | 60,218,183 | 26,314,009 | 94,278,709 | 29,820,000 | 17,865,947 | 17,762,904 | 60,374,535 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,800,000 | 1,908,123 | 1,908,123 | - | 3,700,000 | 875,091 | 875,091 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 45,428,000 | 52,975,790 | 45,545,119 | 24,182,346 | 27,578,000 | 20,259,081 | 16,371,755 | 16,751,675 |
| | | 122,844,889 | 133,263,890= | 89,524,910 | 133,406,055 | 79,042,000 | 57,230,465 | 55,904,660 | 89,667,075 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

முன்னைய ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு திரட்டிய வருமான பற்றாக்குறை நிலுவை ரூபா 89,667,075 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அது ரூபா

133,406,055 என 48 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது இதன் பிரகாரம் சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது

**(அ) வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 14,945,000 ஆக இருந்தது. அதில் ஒரு அலகு ரூபா 10,000 ஐ மிகைத்த 344 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 6,980,103 தொகையும் நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| i. | ஹட்டன் வாடிவீட்டினை வாடகைக்கு வழங்கியமையால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 1,581,710 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 88,375,598 ஆன நிலுவை கடை வடகை மீதியொன்று இருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டிருந்த 332 கடை உரிமையாளர் களிடமிருந்து ரூபா 87,391,677 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவை மீதியொன்று காணாப்படும் 08 கடை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 412,974 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | – மேற்படி - | – மேற்படி - |

**(இ) ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 4,067,262 ஆன நிலுவை காணி குத்தகை வாடகை மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ஒரு அலகு ரூபா 1,000 இற்கு மேற்பட்ட நிலுவையொன்று காணப்படுகின்ற 139 அலகுகளில் இருந்து ரூபா 4,061,494 தொகை தொடர்பாக நகர சபை கட்டளை சட்டத்தின் (255 அதிகாரம்) 170 (1) (2) மற்றும் 170 (அ) (2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,053,166 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 23,129,180 ஆக இருந்தது. | அட்டவணைகளை சமர்ப்பித்து கட்டணங்களை அறவிட்டுக் கொள்வதாக. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையில் நாளாந்தம் சேரும் கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்கான பிரிவொன்று நிறுவப்படாமை காரணமாக மாதாந்தம் சேரும் 54.5 தொன் அளவிலான உக்கும் மற்றும் உக்காத கழிவுகளை கழிவுப்பொருள் நிலையத்திற்கு போக்குவரத்து செய்வதற்காக 2020 முதல் 2024 வரை ரூபா 12,408,785 தொகை செலவிடப்பட்டிருந்தது. | கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் ஒன்றை நிறுவுவதற்காக பொருத்தமான இடமொன்றை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | திண்மக்கழிவு பொருள் முறையாக முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |

**(ஆ) சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹட்டன் பேரூந்து நிலையத்தில் பொது மலசல கூடத்தின் கலி குழிகள் நீண்ட காலமாக நிறைந்து வெளியேறிச் செல்லப்பட்டு காணப்பட்ட போதும் அதனை திருத்தி அமைப்பதற்கு நகர சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தி அமைப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதாக. | பொதுமக்களுக்கு பாதிபுக்கள் ஏற்படாத வகையில் சேவைகளை நடத்திச் செல்ல வேண்டும். |

## 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது 34192 சதுர அடியுடன் கூடிய BA/23/2019 இலக்க வியாபார கட்டிடத்திற்குரிய வருமான பரிசோதரால் தற்காலிக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருடாந்தம் ரூபா 718,936 ஆன வீதவரி அறவிடப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்ட 39589 சதுர அடியுடன் கூடிய BA/72/2019 அளவிலான வியாபார கட்டிடத்திற்கு தற்காலிக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வீதவரி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை ஆதலால் இந்த 39589 சதுர அடியுடன் கூடிய கட்டிடத்துக்காக குறைந்தது 34192 சதுர அடி அளவிலான மேற்படி வியாபார கட்டிடத்தின் ஆண்டு பெறுமதியான ரூபா 718,936 பெறுமதி ஆண்டுப்பெறுமதியாக கொள்ளப்பட்டால் கடந்த 05 ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,594,680 ஆன வீத வரி வருமானமொன்று சபை நிதியத்திற்கு கிடைக்காமல் போயிருந்தது. | புதிய வீதவரி மதிப்பீட்டிற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | மதிப்பேற்று அறிக்கையின் அடிப்படையில் அல்லது தற்காலிக வீத வரி அடிப்படையில் வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டில் மோட்டார் வாகன நிறுத்தல் கட்டணங்கள் அறவீடு கேள்வி மூலம் வெளித்தரப்பினருக்கு கையளிக்கப்பட்டு ஆண்டில் ரூபா 4,467,865 தொகையான வருமானமொன்று உழைக்கப்பட்டு இருந்த போதும் முகாமைத்துவ குழு தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபை ஊழியர்களை ஈடுபடுத்தி ரூபா 3,373,921 ஆன மோட்டார் வாகன நிறுத்தல் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இந்த வருமானம் முன்னைய ஆண்டில் கேள்வி மூலம் உழைக்கப்பட்ட வாகன நிறுத்தல் கட்டண வருமானத்துடன் ஒப்பிடும் போது சபை நிதியத்திற்கு ரூபா 1,093,944 ஆன நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | பொதுமக்களிடமிருந்து முறைப்பாடு கிடைத்ததன் காரணமாக சபையால் உரிய கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாக. | சபை நிதியத்திற்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 03 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 3,483,279 ஆக இருந்தது. அதில் 1 ஆண்டிற்கு மேற்பட்ட 05 ஆண்டுகளுக்கு குறைந்த மீதி ரூபா 3,386,245 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 50,921 ஆகவும் இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 திசெம்பர் 15 ஆம் திகதிய 2363 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானயில் வெளியிடப்பட்ட மோட்டார் வாகன நிறுத்தி வைத்த கட்டண அட்டவணை 04 இன் பிரகாரம் அதிகாரப்பிரசேத்தில் பதிவு செய்யப்பட்ட 338 முச்சக்கர வண்டிகளில் மீளாய்வாண்டிற்குரிய மொத்தம் ரூபா 1,986,000 ஆன முச்சக்கர வண்டி கட்டணங்கள் பட்டியலிடப்பட்டு அறவிடப்படாமை காரணமாக சபைக்கு நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | நிலுவை தொகையை கொடுப்பனவு தவிர்ப்பு செய்வதற்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதி பிரமாணம் 371(5) இன் பிரகாரம் 1987 முதல் 2023 வரையான காலப்பகுதியிலிருந்து காணப்படும ரூபா 4,327,007 தொகையான 61 முற்பண மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | முற்பணங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 46 கடைகளில் குத்தகையாளர்களுடன் 06 ஆண்டுகள் முதல் முதல் 26 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் உடன்படிக்கை காலம் முடிவடைந்து இருந்த போதும் மீண்டும் உடன்படிக்கையினைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | புதிய உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (உ) | 2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் சபைக்குரிய 28 கடைகள் உபகுத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | புதிதாக உடன்படிக்கை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உள்ளதாக. | குத்தகை வழங்குவது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நகர சபை எல்லைக்குள் மாதாந்தம் ரூபா 500 வீதம் அறவிடப்பட்டு 25 வியாபாரிகளுக்கு நடைபாதையில்ு பேருந்து நிறுத்துமிட வளவிலும் தற்காலிக கடைகளை நிர்மாணித்து நடத்திச் செல்வதற்கு நீண்ட காலமாக இடமளித்தமை காரணமாக நகரம் முறையற்றதாக இருந்ததுடன் இவ்வாறான இரண்டு கடைகள் பேருந்து நிறுத்துமிடத்திற்கு பயணிகளுக்கு நுழைவதற்கான படிக்கட்டுகளை இடையூறு செய்யும் வகையில் நடத்திச் செல்லப்பட்டு இருந்த போதும் சபை எவ்வித நடவடிக்கை ஒன்றையும் எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக. | அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் மிகை நிதியை வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்கள், சபை சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் அல்லது பெரும்பான்மையான மக்களுக்கு பொது வசதிகளை வழங்கக் கூடிய செயற் | அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த செயற்திட்டங்களை மாத்திரம் மேற்கொள்வதாக. | மிகை பணத்தை மக்களின் பொது வசதிகள் வசதிகளை வழங்குவதற்கு அல்லது பிரதேச அபிவிருத்திக்கு |

| | | |
|---|---|---|
| திட்டங்களில் பயன்படுத்தாமல் சபையால் ரூபா 32,093,847 மிகை பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | | பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| **விளைவற்ற / குறை பயன்பாடுடைய ஆதனங்கள்**<br>ரூபா 2,831,200 கூட்டுபெறுமதியான 04 வாகனங்கள் 01 ஆண்டிற்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக பயன்பாடு இன்றி விளைவற்று அல்லது குறை பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு காணப்பட்டன திருத்த வேலைகளுக்காக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் விளைவற்று காணப்பட்டது. | திருத்த வேலைகளுக்காக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 1970 பிப்ரவரி 26 ஆம் திகதி நகர சபையால் உரித்து உறுதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த ஹட்டன் வாடி வீட்டு காணியின் பாதுகாப்பிற்காக வேலி எல்லை இடப்பட்டு பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட்டு இருக்கவில்லை. | வாடி வீட்டுக் காணியின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் |
| **(ஆ) கையேற்கறப்படாத வாகனங்கள்**<br>சபை பயன்படுத்துகின்ற ரூபா 6,390,000 ஆன கெப் வண்டி ஒன்றின் உரித்து கையேற்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) செயலாளர், பொது சுகாதார பரிசோதகர், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் நூலகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், தொழில் | வெற்றிடங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு பொதுமக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | நுட்ப உதவியாளர், வருமான பரிசோதகர், சுகாதார காப்பளர், சாரதி, பார ஊர்தி செயற்பாட்டாளர், ஆயர்வேத மருந்து கலப்பவர், காவலாளி, மோட்டார் வாகன காப்பாளர், அலுவலக உதவியாளர், நூலக உதவியாளர், வேலை வெளிக்கள தொழிலாளி, சுகாதார தொழிலாளர் உட்பட 28 பதவிகளில் 103 வெற்றிடங்கள் காணப்பட்ட காரணத்தினால் சபையில் செயலாற்றல் மற்றும் பொது மக்கள் சேவைகளை நிறைவேற்றும் இயலுமை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | | சேவைகளை செயற்திறனாக வழங்க வேண்டும். |
| (ஆ) | நகர சபை அதிகார பிரதேசத்தில் திடீர் தீ விபத்து சந்தர்ப்பங்களின் போது அத்தியாவசியமாக இருக்க வேண்டிய தீயணைப்பு நடவடிக்கைளில் கட்டாயமாக இருக்க வேண்டிய தீயணைப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பான தீயணைப்பு வீரர், முதலாம் வகுப்பு தீயணைப்பு வீரர், இயந்திர தீயணைப்பு வீரர் மற்றும் தீயணைப்பு உத்தியோகத்தர் போன்ற தீயணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் வெற்றிடங்கள் காரணமாக அவசர தீ விபத்து ஏற்பட்டால் தீயை அணைப்பதில் தாமதம் ஒன்று ஏற்படக் கூடியதாக இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வு பெற்ற, மரணித்த, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற பதினைந்து உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 2,123,265 ஆன கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கடன் மீதிகளைத் அறவிடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |